குடியரசுத் தலைவர் தேர்தல் வாக்குப் பதிவு: எம்எல்ஏக்களுக்கு பயிற்சி

புதுச்சேரி, ஜூலை 14: குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு குறித்து, புதுச்சேரியில் எம்எல்ஏக்களுக்கு வியாழக்கிழமை பயிற்சியளிக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் வருகிற 18-ஆம் தேதி நடைபெறுகிறது. புதுச்சேரி சட்டப்பேரவை வளாக 4-வது மாடியில் உள்ள கருத்தரங்க அறையில் தேர்தல் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, புதுச்சேரி சட்டப்பேரவையில் உள்ள வாக்குச் சாவடி மையத்தில் வியாழக்கிழமை மாலை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான பயற்சி வகுப்பு நடைபெற்றது.

மாநில துணைத் தலைமை தேர்தல் அதிகாரி தில்லைவேல், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர். முனிசாமி ஆகியோர் தலைமை வகித்தனர்.

புதுச்சேரி சட்டப்பேரவை அலுவலகத்தில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான பயிற்சி வகுப்பில் பங்கேற்ற சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் க.லட்சுமிநாராயணன் மற்றும் எம்எல்ஏக்கள், அதிகாரிகள்.

சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் க.லட்சுமிநாரயணன், எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சிவா, எம்எல்ஏக்கள் ஜி.நேரு, பி.ரமேஷ், டி.ஆறுமுகம், லட்சுமிகாந்தன், தட்சிணாமூர்த்தி, சிவசங்கரன், ஜான் குமார், ரிச்சர்டு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்குச் சீட்டு முறையில் வாக்களிப்பது குறித்து, மாதிரி வாக்குச்சீட்டு செயல் விளக்கத்துடன் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

சட்டப்பேரவை அலுவலகம் 3 நாள்களுக்கு செயல்படாது: புதுச்சேரி சட்டப்பேரவை அலுவலகத்தில் வருகிற 18-ஆம் தேதி குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வருகிற 16-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை 3 நாள்களுக்கு சட்டப்பேரவை வளாகத்தில் செயல்படும் சட்டப்பேரவை செயலகம், அமைச்சரவை செயலகம், பேரவைத் தலைவர் அலுவலகம், முதல்வர், அமைச்சர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலகங்களும் செயல்படாது.

வாக்காளர்கள், வேட்பாளர்கள், முகவர்கள், தேர்தல் அதிகாரிகள், அலுவலர்கள், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட செய்தி, தகவல் தொடர்பு பணியாளர்கள் உள்ளிட்டோர் மட்டுமே சட்டப்பேரவை வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவர் என்று புதுச்சேரி சட்டப்பேரவைச் செயலர் ஆர்.முனிசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செங்கம் மூகாம்பிகையம்மன் கோயிலில் குரு பௌர்ணமி சிறப்பு பூஜை

செங்கம், ஜூலை 14: திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஸ்ரீமூகாம்பிகையம்மன் கோயிலில் புதன்கிழமை இரவு நடைபெற்ற குரு பௌர்ணமி சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

செங்கம் மூகாம்பிகையம்மன் கோயிலில் புதன்கிழமை இரவு நடைபெற்ற குரு பௌர்ணமி பூஜையையொட்டி சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த மூலவர் ஸ்ரீமூகாம்பிகையம்மன்.

செங்கம் செய்யாற்றங்கரையோரம் தளவாநாய்க்கன்பேட்டை பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீமூகாம்பிகையம்மன் கோயிலில் குரு பௌர்ணமி பூஜை புதன்கிழமை இரவு நடைபெற்றது. இதையொட்டி, அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை, அலங்காரம் நடைபெற்றன. மேலும், 108 கலச ஹோமம் நடைபெற்றது.

இதில் ஆத்மானந்தா செந்தில் சுவாமிகள் கலந்துகொண்டு சுவாமிக்கு படையலிடப்பட்ட வளையல், குங்குமம் போன்றவற்றை பக்தர்களுக்கு வழங்கி ஆசி வழங்கினார். திருமண வரம் வேண்டியும், குழந்தை வரம் வேண்டியும் பெண்கள் அம்மனை வழிபட்டனர். பூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

கல்வி வளர்ச்சி நாள் போட்டிகள்

சிதம்பரம், ஜூலை 14: காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு சிதம்பரம் காந்தி மன்றம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு இணைய வழியில் போட்டிகள் நடத்தப்பட்டன.

'கல்வி வளர்ச்சியில் காமராஜரின் பங்கு' என்ற தலைப்பிலான பேச்சுப் போட்டியில் வயலூர் காமராஜ் சிறப்புப் பள்ளி மாணவி ரா.ரிதன்யா முதலிடமும், சிதம்பரம் மானாசந்து நகராட்சி நடுநிலைப் பள்ளி மாணவர் எம்.புவியரசன் இரண்டாமிடமும், வீனஸ் மெட்ரிக் பள்ளி மாணவி வ.ஆத்மிகா மூன்றாமிடமும் பெற்றனர்.

'காமராஜர் கொண்டு வந்த நீர்ப்பாசனத் திட்டங்கள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் ராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி மாணவர் மா.எழிலரசன் முதலிடமும், காட்டுமன்னார்கோவில் பிஆர்ஜி மேல்நிலைப் பள்ளி மாணவர் அ.அகத்தியன் இரண்டாமிடமும், சிதம்பரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி பா.ஸ்வேதா மூன்றாமிடமும் பெற்றனர்.

போட்டிகளில் 60-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர் என்றும், இதில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு பரிசுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும் காந்தி மன்றத் தலைவர் மு.ஞானம் தெரிவித்தார்.

புதுவையில் அதிகரிக்கும் கரோனா தொற்று

புதுச்சேரி, ஜூலை 14: புதுவையில் வியாழக்கிழமை மேலும் 221 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதுகுறித்து புதுவை சுகாதாரத் துறை வெளியிட்ட தகவல்:

புதுவை மாநிலத்தில் 1,938 பேரை பரிசோதித்து வியாழக்கிழமை வெளியான முடிவுகளின்படி, புதுச்சேரியில் 207, காரைக்காலில் 7, ஏனாமில் 7 என 221 பேருக்கு (11.40 சதவீதம்) கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. மாஹேவில் யாருக்கும் தொற்று இல்லை.

இதன்மூலம் மாநிலத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்தஎண்ணிக்கை 1,68,274-ஆக அதிகரித்தது. இதில் தற்போது 8 பேர் மருத்துவமனைகளிலும், 1,008 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் என 1,016 பேர் சிகிச்சையில் உள்ளனர். இதனிடையே 120 பேர் குணமடைந்தனர். கடந்த சில நாள்களாக மாநிலத்தில் கரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

'சாமந்திப்பூ சாகுபடி செய்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்'

விழுப்புரம், ஜூலை 14: சாமந்திப்பூ சாகுபடி செய்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் த.மோகன் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், சேமங்கலம் ஊராட்சியில் தேசிய தோட்டக்கலைத் துறை சார்பில் சாமந்திப்பூ சாகுபடி செய்யப்பட்ட விளை நிலங்களை மாவட்ட ஆட்சியர் த.மோகன் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, முன்னோடி விவசாயி பசுபதியின் ஓர் ஏக்கர் விளை நிலத்தில் சாமந்திப்பூ பயிரிட்டுள்ளதை ஆட்சியர் பார்வையிட்டு விவரங்களை கேட்டறிந்தார். தொடர்ந்து, ஆட்சியர் கூறியதாவது:

சேமங்கலம் ஊராட்சியில் சாகுபடி செய்யப்பட்ட சாமந்திப்பூ செடிகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் த.மோகன்.

விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை வழிகாட்டுதலின்படி 500 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் சாமந்திப்பூ பயிரிட்டு நிலையான வருவாய் பெற்று வருகின்றனர். ஒரு ஹெக்டேரில் பயிர் சாகுபடிக்கு ரூ.16,000 மதிப்பீட்டில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் இலவசமாக நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சொட்டு நீர்ப் பாசன உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், நடுத்தர, பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர்ப் பாசன உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. சாகுபடியாகும் பூக்கள் வேளாண் விற்பனை மையம் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. எனவே விவசாயிகள் சாமந்திப்பூ சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம் என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் காரல் மார்க்ஸ், உதவி இயக்குநர்கள் வெங்கடேசன், வித்தியா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திறன் வளர்ப்பு பயிற்சிக்கு ஒப்பந்தம்

கள்ளக்குறிச்சி, ஜூலை 14: அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் பி.என். ஸ்ரீதர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், மாநில ஊரக வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகு, உன்னதி அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் சு.தேவநாதன், மாவட்ட திறன் வளர்ப்பு உதவி இயக்குநர் நடராஜன், உதவித் திட்ட அலுவலர் ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அன்னை சாரதா குடில் அமைக்க அடிக்கல்

நெய்வேலி, ஜூலை 14: நெய்வேலியில் அன்னை சாரதா குடில் அமைப்பதற்கான பூமி பூஜை அண்மையில் நடைபெற்றது.

நெய்வேலி, வட்டம் 18-இல் ராமகிருஷ்ணா சேவா சங்கம் அமைந்துள்ளது. இந்த வளாகத்தில் அன்னை சாரதா குடில் அமைக்க பூமிபூஜை நடைபெற்றது. இதேபோல், நெய்வேலி வட்டம் 16-இல் அமைந்துள்ள வில்லுடையான்பட்டு கோயில் வளாகம் அருகே சுமார் 20அடி உயரத்தில் வேல், மயில் உருவங்கள் அமைக்க பூமி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்த என்எல்சி செயல் இயக்குநர் ஆர்.மோகன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடக்கிவைத்தார். ராமகிருஷ்ணா சேவா சங்க நிர்வாகிகள் கென்னடி, மணி, நகர நிர்வாக அதிகாரிகள் ராமன், செல்வமணி, அண்ணாதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பள்ளியில் மருத்துவ பரிசோதனை முகாம்

சிதம்பரம், ஜூலை 14: சிதம்பரம் டெம்பிள் டவுன் ரோட்டரி சங்கம், கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து சிதம்பரம் மாலைக் கட்டித் தெரு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான பொது மருத்துவ பரிசோதனை முகாமை அண்மையில் நடத்தின.

முகாமில் அரசு மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் தேவி தலைமையிலான மருத்துவக் குழுவினர் 5-ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகளை பரிசோதனை செய்தனர். மேலும், 6 முதல் 8-ஆம் வகுப்பு வரையிலான மாணவிகளுக்கு மாதவிடாய் குறித்து மருத்துவக் குழுவினரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முகாமுக்கு சிதம்பரம் டெம்பிள் டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் ராஜராஜன் தலைமை வகித்தார். பள்ளித் தலைமை ஆசிரியை டி.ஜெயா வரவேற்றார். மண்டல துணை ஆளுநர் எம்.தீபக்குமார் முன்னிலை வகித்து பேசினார்.

முகாமில் 150- க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது.

ICICI Home Finance

நிறுவன அலுவலகம்: ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட், ICICI HFC டவர், அந்தேரி - குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா.

கிளை அலுவலகம்: ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட், 2ஆவது தளம், சொர்ணாம்பிகை வளாகம், ஓமலூர் பிரதான சாலை, சேலம் - 636009.

[பார்க்க விதி 8(6)-இன் விதிமுறைகள்]

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் விதிமுறைகள் கீழான அசையாச் சொத்துக்களின் E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிட்-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள வரைதீமம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் கருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் / கடன் கணக்கு எண்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் - தெரிந்த வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன்	நிலுவைத் தொகை	குறைந்தபட்ச விலை / டேவணித் தொகை (EMD)	சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏல நாள் மற்றும் நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	S சுந்தரவதனம் (கடன்தாரர்), S ஜானகி (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHKLK00000825647	சர்வே எண் 165/17A, பட்டா எண் 179, பசுங்காயம்பலம் சாலை, பத்மா நகர், க. மாமுனந்தல், தியணைப்பு சேவை பின்பக்கம், கள்ளக்குறிச்சி - 606202.	ரூ.30,36,123/- (09.07.2022 நாள்படி)	ரூ. 23,43,750/- / ரூ. 2,34,375/-	25.07.2022 - முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	30.07.2022 - முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

இணைய ஏலமானது எமது ஏல முகமையான ஆக்ஷன் டைகர் மூலம் இணையத்தளத்தில் (**இணைய முகவரி: https://sarfaesi.auctiontiger.net/EPROC/**) நடத்தப்படும். மொத்த நிலுவையையும் **29.07.2022 அன்று மாலை 05:00 மணிக்குள்** வட்டியுடன் செலுத்தி விட அடமானதாரருக்கு / அறிவிப்புக்குரியவருக்கு இதன் மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறினால், இந்தக் கடனீட்டுச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும்.

விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித் தொகையைக் (EMD) RTGS/கேட்பு வரைவோலை (DD) வடிவில் (பார்க்க: பத்தி E) **ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட், 2ஆவது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் முதன்மைச் சாலை, சேலம்-636009** எனும் முகவரிக்கு 29.07.2022 அன்று அல்லது அதற்கு முன் மாலை **04:00 மணிக்குள்** அனுப்ப வேண்டும். ஒருவேளை, விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் விலைவோலை மேற்குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்க இயலாவிட்டால் கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை 2ஆவது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் முதன்மைச் சாலை, சேலம்-636009 எனும் முகவரியில் உள்ள ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் அலுவலகத்தில் **29.07.2022 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க. டேவணித் தொகை "ICICI Home Finance Company Ltd.-Auction" எனும் பெயருக்குக் கள்ளக்குறிச்சியில் மாற்றத்தக்க வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட / அட்டவணையிடப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலை (DD) வடிவில் இருக்க வேண்டும்.

சொத்துக்களைப் பார்வையிடுவது, ஏலம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பது தொடர்பான மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்க: **ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்** - 7021072869.

எந்தக் காரணமும் குறிப்பிடாமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு. விற்பனையின் விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகள் தெரிந்து கொள்ள https://www.icicihfc.com இணையப் பாருங்கள்.

நாள்: 15.07.2022
இடம்: தமிழ்நாடு, கள்ளக்குறிச்சி

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தவத்திரு. ஊரன் அடிகளார்

22.05.1933 - 13.07.2022

சன்மார்க்கத்தை உயிர் மூச்சாகக் கொண்டவரும், வடலூர் சுத்த சன்மார்க்க நிலையத்தின் துணைத்தலைவருமான தவத்திரு. ஊரன் அடிகளார் அவர்கள் 13.07.2022 அன்று இரவு அருட்பெருஞ்ஜோதியில் ஐக்கியமானார்.

அடிகளாரை பற்றி அருட்செல்வர் நா. மகாலிங்கம் கூறியது
" இளமையிலேயே துறவு பூண்டு சன்மார்க்க நெறியில் சென்ற பெருமையும், தமிழ்ப்புலமையும், சலியாது பணியாற்றும் திண்மையும் ஒருசேரப் பெற்றவர் திரு. ஊரன் அடிகள் "

இங்ஙனம்
சுத்த சன்மார்க்க நிலையம் | இராமலிங்கர் பணிமன்றம்
சக்தி குழுமம்

இயற்கை எய்தினார்

தமிழக முன்னாள் துணை அமைச்சர் அமரர் **திரு. ஐசரி வேலன்** அவர்களின் துணைவியாரும், வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் **Dr. ஐசரி K. கணேஷ்** அவர்களின் தாயாருமான

திருமதி. புஷ்பா ஐசரி வேலன் (75) அவர்கள்

நேற்று (14/07/2022) காலை 9:30 மணிக்கு வயது முதிர்வு காரணமாக இயற்கை எய்தினார்.

தோற்றம் 07/05/1947

மறைவு 14/07/2022

வருந்துகிறோம்

ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், வேல்ஸ் கல்வி குழுமம்

VELS UNIVERSITY

Vels Medical College and Hospital
Sri Venkateswara Dental College and Hospital
Venkateswara Nursing College
Vel Nursing College
Shri Isari Velan Multi-Speciality Hospital
Vaels International Schools (CISCE/CAIE)
Vels Vidyashram Group of Schools (CBSE)
Kindle Kids International School (Singapore)
Mahavir Institute of Medical Sciences and Hospital (Telangana)
Meghna Institute of Dental Sciences (Telangana)
Vels Global Schools (Tamil Nadu, Karnataka, Delhi, West Bengal)
Cambridge Tutors College (London)
Vels Film International Ltd
Vels Studios & Entertainment Pvt.Ltd
Vels Aviation Services IFSC Pvt.Ltd

திருமதி. புஷ்பா ஐசரி வேலன் அம்மா அவர்களின் இறுதி சடங்கு இன்று (15/07/2022) காலை 9 மணிக்கு ஈஞ்சம்பாக்கம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஈஞ்சம்பாக்கம் மின் மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.